SENGUNTHAR
Daily News
30-09-2026/SEC/DN/486

திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி) யில் தேசிய அளவிலான மாணவர் தொழிநுட்ப கருத்தரங்கு

SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS)
TIRUCHENGODE-637205,NAMAKKAL (Dt),TAMILNADU

திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி) யில் தேசிய அளவிலான மாணவர் தொழிநுட்ப கருத்தரங்கு

திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரியில் (தன்னாட்சி) 30.09.2026 மற்றும் 01.10.2026 ஆகிய இரண்டு நாள் தேசிய அளவிலான மாணவர் தொழிநுட்ப கருத்தரங்கு நடைபெற்றது. செங்குந்தர் கல்வி குழுமத்தின் தலைவர் ஜான்சன் திரு. டி.என். கலைமணி அவர்கள், செங்குந்தர் கல்வி குழுமத்தின் செயலாளர் மற்றும் தாளாளர் பேராசிரியர் திரு.A.பாலதண்டபாணி அவர்கள், செங்குந்தர் கல்வி குழுமத்தின் பொருளாளர் திரு M.K முருகேசன் அவர்கள், செயல் இயக்குனர் திரு. அரவிந்த் திருநாவுக்கரசு அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர், செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் இயக்குனர் மற்றும் செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் R.சதிஷ்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் டீன் – நிர்வாகம் முனைவர் T. R. சின்னுசாமி அவர்கள் கலந்து கொண்டார். முனைவர் S.சுஜாதா டீன் -அக்காடமிக்ஸ் கருத்தரங்கு குறித்த அறிமுக உரையாற்றினார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திரு. ஜே.ஜெய் கணேஷ் சீனியர் ஆர்கிடெக்ட் (AI தீர்வுகள்), காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ், சென்னை கலந்துகொண்டார். அவர் தமது உறையில் மாணவ, மாணவிகள் செயற்கை நுண்ணறிவை மட்டுமே முழுமையாகச் சார்ந்திருக்கக் கூடாது. ஒவ்வொரு மாணவருக்கும் தனித்துவமான சிந்தனைத் திறன், படைப்பாற்றல், முடிவெடுக்கும் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் போன்ற பல்வேறு ஆற்றல்கள் உள்ளன. இத்திறன்களை நாம் தொடர்ந்து வளர்த்துக்கொள்வது மிகவும் அவசியமாகும். தொழில்நுட்பத் திறன்களுடன் நல்ல தகவல் தொடர்புத் திறனையும் வளர்த்துக்கொள்வது அவசியம். கருத்துகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கும் திறன் ஒவ்வொரு மாணவருக்கும் இருக்க வேண்டும். இறுதியாக, மாணவர்கள் தங்களுடைய வளர்ச்சிக்குப் பாடுபடும் பெற்றோர்களையும், வழிகாட்டும் ஆசிரியர்களையும் மதித்து நடக்க வேண்டும். அவர்களின் அனுபவங்களையும் அறிவுரைகளையும் ஏற்றுக்கொண்டு, தொடர்ந்து கற்றுக்கொண்டு, சமூகத்திற்குப் பயனளிக்கும் வகையில் தங்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார். கருத்தரங்கில் கல்லூரியின் சார்பாக குறுந்தட்டை வெளியிட்டனர். இக்கருத்தரங்கில் ஏழுநூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு கல்லூரி மாணவ ,மாணவிகள் கலந்துகொண்டனர், கலந்துகொண்ட மாணவ, மாணவிகளுக்கு பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் அணைத்து துறை தலைவர்களும் பேராசிரியர்களும் ,மாணவ மாணவிகளும் கலந்துகொண்டனர்.

SENGUNTHAR
Daily News
30-09-2026/SEC/DN/486

நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்

குறள் 846:
அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.
விளக்கம்:
தம்மிடத்திலே உள்ள குற்றங்கள் மறையாதபோது, உடல் முழுவதும் ஆடைகளாலே மறைத்துக் கொண்டு, நல்லவர் போலத் திரிதல், அறிவற்ற தன்மை ஆகும்

இலக்கணக் குறிப்பறிதல்

ஒருபொருட்பன்மொழி

விளக்கம்:
ஒரு பொருளின் சிறப்பிற்காக அப்பொருளைக் குறிக்க பல சொற்கள் வருவது ஒருபொருட்பன்மொழி ஆகும்.

(எ.கா)
ஓங்கி உயர்ந்த
ஒரு தனி
தொழுது வணங்கினான்
காத்து ஓம்பினான

பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி : சாகுபடி தமிழ்மொழி : பயிரிடுல :-